[1978 பிப்ரவரி 23

இணைப்பு II.

[36-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 320-க்கான விடையைக் காண்க.]

(அ) மற்றும் (ஆ): கரூர் நகரில் உள்ள கைத்தறி உரிமையாளர்கள் (முதலாளிகள்) கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பைப் போதிய அளவு அதிகரிக்கவில்லை எனக் கோரி கைத்தறி நெசவாளர்கள் நடத்திய போராட்டத்தின் தொடர்பாக 5—9—1977 முதல் 11—9—1977 முடிய கரூர் நகரில் உள்ள நெசவு, பனியன், சாயம் முதலிய எல்லா கைத்தறி பாக்டரிகளும் மூடப்பட்டிருந்தன.

(இ) 11—9—1977 ஆம் தேதியன்று கைத்தறி நெசவாளர் போராட்டக்குழு பிரதிநிதிகள், கைத்தறி உரிமையாளர் பிரதிநிதிகள் ஆகியவர்களைக் கொண்ட ஒரு கூட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் நடந்தது. இக்கூட்டத்தில் விசைத்தறிகளில் பெட்ஸீட், தலையணை உரை தயாரிக்க, கைத்தறி உரிமையாளர்கள் நூல் வழங்கக்கூடாது எனவும் மூடப்பட்ட பாக்டரிகளை உடனடியாகத் திறக்கவும், நெசவுத் தொழிலாளர்களுக்கு திரும்ப வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. மீண்டும் 24—10—1977 ஆம் தேதியன்று சென்னையில் கைத்தறி இயக்குநர் மற்றும் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர், போராட்டக்குழு, கைத்தறி உரிமையாளர்கள் கரூர், மற்றும் வெள்ளக்கோவில் பகுதிகளைச் சார்ந்த விசைத்தறி உரிமையாளர்கள் ஆகிய முத்தரப்பினரும் கொண்ட கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

(1) ஏற்கனவே ஒப்பந்தம் செய்தபடி படுக்கை விரிப்புகளில் குறிப்பாக 2/2 ரகங்கள் சாதா ரகங்கள் உட்பட விசைத்தறியில் உற்பத்தி செய்யக் கூடாது.

(2) பீசாக (piece) நெய்யும்போது படுக்கை விரிப்பு ரகங்களை ஒட்டிய வகைகள் 47" அகலத்துக்குட்பட்டே விசைத்தறிகளில் உற்பத்தியாகலாம். 47" அகலத்துக்கு மேற்பட்ட ரகங்கள் கைத்தறிக்கே ஒதுக்கப்படும் என்றும்,

(3) 47" அகலத்துக்கு மேற்பட்ட மேலே (2)-ல் குறிப்பிட்ட ரகங்களில் கைத்தறியில் நெய்ய இயலாதவையும் தேவையான அளவு உற்பத்தி கிடைக்க வகையில்லாத ரகங்களையும் கைத்தறி இயக்குநர் அவர்களால் ஏற்படுத்தப்படுகின்ற அலுவலர் குழு அனுமதித்தால் மட்டும் விசைத்தறிகளில் உற்பத்தி செய்யலாம்.